செ.வெ.எண்: 620 நாள்: 21.10.2020

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் புதுக்கோட்டை மாவட்டத்திற்கு (22.10.2020) நாளை வருகைதந்து மாவட்ட வளர்ச்சித் திட்டப் பணிகள் மற்றும் கொரோனா நோய் தடுப்புப் பணிகள் குறித்து ஆய்வுக் கூட்டம் நடத்த உள்ளார்கள்.**

**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

---

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் புதுக்கோட்டை மாவட்டத்திற்கு (22.10.2020) நாளை வருகைதந்து மாவட்ட வளர்ச்சித் திட்டப் பணிகள் மற்றும் கொரோனா நோய் தடுப்புப் பணிகள் குறித்து ஆய்வுக் கூட்டம் நடத்த உள்ளார்கள். இதுகுறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழகத்தில் அனைத்து மாவட்டங்களிலும் மேற்கொள்ளப்பட்டு வரும் அரசின் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளின் முன்னேற்றம் குறித்தும் மற்றும் கொரோனா நோய் தடுப்புப் பணிகள் குறித்தும் அனைத்து மாவட்டங்களிலும் ஆய்வு மேற்கொண்டு வருகிறார்கள்.

அந்த வகையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் புதுக்கோட்டை மாவட்டத்திற்கு 22.10.2020 நாளை வருகைதர உள்ளார்கள். காலை 10.20 மணியளவில் விராலிமலை ஐ.டி.சி நிறுவனத்தினை பார்வையிடுகிறார்கள். அதன் பின்னர் விராலிமலை காமராஜர்நகர் பிரிவு சாலையில் தமிழர்களின் பாரம்பரியத்தை பறைசாற்றும் வகையில் அமைக்கப்பட்டுள்ள ஜல்லிக்கட்டு காளை சிலையினை திறந்து வைக்க உள்ளார்கள். மேலும் புதுக்கோட்டை கவிநாடு கண்மாயில் குடிமராமத்து திட்டப் பணிகளை பார்வையிட்டு, விவசாயிகளுடன் கலந்துரையாட உள்ளார்கள்.

அதனை தொடர்ந்து புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகத்தில் பல்வேறு துறைகளின் சார்பில் புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டியும், முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்து பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்பிக்க உள்ளார்கள்.

அதனை தொடர்ந்து, மாவட்ட வளர்ச்சித் திட்டப் பணிகள் மற்றும் கொரோனா நோய் தடுப்புப் பணிகள் குறித்து அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் நடைபெறுகிறது.

பின்னர் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் கூட்டமைப்பு நிர்வாகிகள், விவசாய சங்க பிரதிநிதிகள் மற்றும் மகளிர் சுய உதவிக் குழுவினருடன் கலந்தாய்வுக் கூட்டம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெறுகிறது.

இந்நிகழ்வுகளில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசு செயலாளர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளார்கள். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---------------------------------------------------------------------------------------------------------

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**